முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1507

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.11.2023, செவ்வாய்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற அரங்கனே
வள்ளலாக வாழுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 28 ம் நாள், 14.11.2023, செவ்வாய்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் ஞானம் பயின்றால்
3. தருகின்றேன் ஆறுமுகன் பிறவாபேற்றை
தக்கபடி ஞானமோடு அவர்களுக்கு பிறவிநோக்கம்
தடையற சித்திக்கும் வண்ணம்
அறிவு தெளிவு திடம்
4. திடமோடு அரங்கன் கரம்பட பெறுகின்ற தீட்சைக்கு
தக்கபலம் கூட்டி வருவோரெல்லாம்
எல்லோரும் ஞானிகளாக மாற்றம் பெற
இனிதே ஆறுமுகன் யான் அருளுகின்றேன்
5. அருளும் ஞானமும் அருட்பொருள் வளமும்
வரமாகப் பெற்று உலகோர் திழைக்க வையகத்தில் அரங்கன் குடில்நோக்கி
நோக்கி வந்து ஞான தவமுறை பயிலுவதோடு
ஆற்றல்பட அன்னதான சேவையும்
6. அருட்குடையாக பொருளுதவியோடு அரங்கன்
வழிகாட்டும் வண்ணம் கிளைகள் துவக்கி
துவக்கியே உலகோர் தர்மம் வளர்க்க
குறைவின்றி வருவோரெல்லாம்
7. ஞானவான்களாக தர்மவான்களாக இந்த பேருலகை காக்கும்
ஞானிகளாகவும் ஆற்றல்பெருக்கம் கண்டு அரங்கன் வழித் தேறி
அரங்கன் அவதார நோக்கத்தை பூர்த்தி செய்வேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—